25.03.2026

O.S.No.72/2011

பி.வா.சா.1.திரு.ஜபர்லாகான், த.பெ.லேட். அப்துல் ராவுத்தர்.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை**

1. எனது தகப்பனார் எந்த ஆண்டு இறந்தார் என்று சரியாக ஞாபகமில்லை. 2017 இருக்கும். நான் 2000ஆம் ஆண்டு வீடு கட்டினேன். இந்த வழக்கு எந்த சர்வே எண்ணுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் அசல் வழக்கு தாக்கல் செய்தபோது T.S. No.113/1 சம்மந்தமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு T.S. No.113/1க்கு கிடையாது என்றால் சரிதான்.

2. பி.வா.சா.ஆ.3 T.S. No.114க்குதான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்து என்றால் சரிதான். இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்த விவரம் எனக்கு இன்றைய தேதிவரை தெரியுமா என்றால் தெரியாது. எனவே நீதிமன்ற ஆணையர் அறிக்கை சம்மந்தமாக எனது நிரூபண வாக்குமூலம் பத்தி 2,3 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் தவறு என்றால் சரியல்ல. அதில் குறிப்பிடப்பட்டுள்ள விவரம் சரிதான். எனது நிரூபண வாக்குமூலம் பத்தி 2,3 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் ஆணையர் அறிக்கையில் தெரிந்தக் கொண்டபின்புதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். பின்னிட்டு நான் ஆணையர் அறிக்கையை தெரிந்து கொண்டதை குறிப்பிட்டுள்ளேன்.

3. ஆணையர் அறிக்கை தவறானது என ஆட்சேபனை செய்யவில்லை என்றால் மனு கொடுத்துள்ளேன். பி.வா.சா.ஆ.3

ஆவணத்தில் கண்ட T.S. No.114 எனக்கும் வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் பொது பாத்தியப்பட்டது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு பின்பு நான் இதே நீதிமன்றத்தில் T.S. No.114 சம்மந்தமாக O.S.297/2015 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் T.S. No.113/1 க்கு தாக்கல் செய்தேன். O.S. No.297/2015 வழக்கானது எனக்கு சாதமாக தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது என்றால் ஆமாம். O.S. No.297/2015 வழக்கின் தீர்ப்பை எதிர்த்து 1ம் வாதியும் அவரது மனைவியும் A.S. No.37/2024 என்ற எண்ணில் மேல்முறையீடு தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் ஆமாம். அந்த மேல்முறையீடு 19.09.2025ம் தேதி அனுமதிக்கப்பட்டது என்றால் ஆமாம். என்னிடம் காண்பிக்கப்படுவதுதான் A. S. No.37/2024 என்ற வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். A. S. No.37/2024 என்ற வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. A. S. No.37/2024 என்ற வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. A. S. No.37/2024 என்ற வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை எதிரித்து 2வது மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

4. வா.சா.ஆ.12 A. S. No.37/2024 என்ற வழக்கின் தீர்ப்பாணையின்படி சொத்து விவரத்தில் T.S. No.114 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5. நான் தாக்கல் செய்த O.S. No.297/2015 வழக்கானது இந்த வழக்கில் ஆணையர் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு பொதுபாதையில் நான் ஆக்கரமிப்பு செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ள பின்பு தாக்கல் செய்தேன்

என்றால் தவறு. வழக்கு சொத்தில் நான் செய்துள்ள ஆக்கிரமிப்பை காபாற்றிக் கொள்ளவே O.S. No.297/2015 வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

6. எனது தகப்பனார் எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணப்படி எனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சொத்து T.S. No.111 என்றால் சரிதான். T.S. No.112 என்பது இஸ்மாயில் கனிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். T.S. No.113 என்பது இந்த வழக்கின் வாதி அப்பாஸ் அலிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். T.S. No.115 கமாலு மைதின் என்பவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். T.S. No.116 காதர் ஜான் என்பவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஐந்து நபர்களும் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். மேற்படி ஐந்து நபர்களுக்கும் ஒரே நாளில் தான் எனது தகப்பனார் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான்.

7. எங்களது சொத்தின் கிழக்கு பக்கம் காந்திஜி பூங்கா உள்ளது. எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் கமாலு மைதின், காதர் ஜான் ஆகியோர்களுக்கு வடக்கு பக்கம் என்றால் வடக்கேயும் தெற்கேயும் உள்ளது. எனக்கு கிழக்கு பக்கமும் வடக்கு பக்கமும் பாதை என்றால் சரிதான். எனக்கு தெற்கே இஸ்மாயில் கனி வீடு உள்ளது என்றால் சரிதான். எனக்கு கிழமேலாக வடக்கேயும் தெற்கேயும் 40 அடி என்றால் வடபுறம் 42 அடி மற்றும் தென்புறம் 40 அடி ஆகும். கீழ்புறம் 20 அடி, மேல்புறம் 21 அடி ஆகும்.

8. இஸ்மாயில் கனி என்பவருக்கு வடபுறம் 40 அடி மற்றும் தென்புறம் 40 அடி ஆகும். கீழ்புறம் 20 அடி, மேல்புறம் 22 அடி ஆகும். இஸ்மாயில் கனி சொத்திற்கு தென்புறம் தான் வாதியின் சொத்து என்றால்

சரிதான். எனக்கும் இஸ்மாயில் கனிக்கும் கிழக்கே பொது பாதை உள்ளது என்றால் சரிதான். எனது சொத்தும் இஸ்மாயில் கனி சொத்தும் கிழக்கே தலா 20 அடி என்றால் சரிதான். எங்கள் சொத்திற்கு கிழக்கே உள்ள பாதை 10 அடி அகலமுடையது என்றால் சரிதான். எனது தகப்பனார் எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணப்படி எனக்கும், இஸ்மாயில் கனிக்கும் வாதிக்கும் பொது பாதை உள்ளது என்றால் சரிதான். அந்த பொது பாதை 61 அடி வரும்.

9. ஆவண்களின் அடிப்படையில இஸ்மாயில் கனி மற்றும் என்னுடைய சொத்திற்கும் கிழக்கே உள்ள பொது பாதை 10 அடி அகலும், 41 அடி நீளமும் உள்ளது என்றால் சரிதான். சாட்சி தானாக சொல்லுகிறார் 61 அடி நீளம் ஆகும். வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்களின் படி பொது பாதை 10 அடி அகலும், 41 அடி நீளமும் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 10 அடி அகலும், 41 அடி நீளமும் காண்பிக்கப்பட்டுள்ள பொது பாதை T.S. No.114 என்றால் சரிதான். 41 x 10–ன் மொத்த விஸ்தீரணம்தான் 37 சதுரமீட்டர் என்றால் சரிதான்.

10. பி.வா.சா.ஆ.7 ஆவணமானது O.S. No.297/2015 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பிற்கு பின்பு அதன் அடிப்படையில் செய்யப்பட்ட உட்பிரிவு என்றால் சரிதான். O.S. No.297/2015 வழக்கின் தீர்ப்பு ரத்து செய்யப்பட்டுவிட்டதால் பி.வா.சா.ஆ.7 ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதல்ல என்றால் சரியல்ல. O.S. No.297/2015 வழக்கின் தீரப்பின் அடிப்படையில் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் பி.வா.சா.ஆ.9 உத்தரவு பிறப்பித்தார் என்றால் சரிதான். வருவாய் கோட்டாட்சியர் உத்தரவை எதிர்த்து வாதி தரப்பில் மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். O.S. No.297/2015

வழக்கின் தீர்ப்பு ரத்து செய்யப்பட்டுவிட்டதால் பி.வா.சா.ஆ.9 ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதல்ல என்றால் சரியல்ல.

11. 2005ம் ஆண்டு எனது தகப்பனார் எங்களுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்த சமயம் வாதியின் சொத்திற்கு தெற்கே திறந்தவெளி கழிப்பிடம் பொதுவாக உள்ளது என்றால் சரியல்ல. நகராட்சி பாதையாக இருந்தது. 2005ல் வாதியின் சொத்திற்கு தென்புறம் திறந்தவெளி கழிப்பிடமாக இருந்ததால் வாதிக்கு பாதைக்குரிய இடத்தையும் சேர்ந்து எனது தகப்பனார் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் தவறு. வாதிக்கு ஆண் வாரிசு இல்லை என்பதாலும் கழிப்பிடம் இருந்த பகுதியை நாங்கள் விரும்பாததாலும் வாதிக்கு அந்த பகுதி எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் தவறு. சொத்து வரிசைப்படி அமைந்துள்ளது.

12. கமாலு மைதினுக்கோ, காதர் ஜானுக்கோ அவர்களது சொத்திற்கு மேற்கே இருக்கக்கூடிய பொது பாதையில் உரிமை கிடையாது என்றால் சரிதான். இந்த வழக்கில் ஆணையர் அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பின்பு நான் பொதுபாதையில் ஆக்கிரமிப்பு செய்ததாக தெரிய வந்த பின்பு இந்த வழக்கில் எதிர்வாதம் செய்யவேண்டுமென்பதற்காக O.S.No.297/2015 வழக்கை நான் தாக்கல் செய்தேன் என்று வாதி தரப்பில் தெரிவிக்கப்படுகிறது என்றால் தவறு. பொது பாதை என்பது 41 x 10 அடிதான் என்றாலும் ஆவணங்களுக்கு விரோதமாக 61 x 10 அடி என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

13. இந்த வழக்கில் வாதிக்கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கை தெரிந்த பின்பும் இன்றைய தேதி வரை நான் ஆட்சேபிக்காத

காரணத்தினால் ஆணையர் அறிக்கையை குறை கூறுவதற்கு எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.